தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

ஆணை நாள். 10.11.2026

முன்னிலை

திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண். CP 4244/F/2024

திரு.அ.ஜான், -- புகார்தாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
வருவாய் வட்டாட்சியர் அலுவலர்,
வருவாய் வட்டாட்சியர் அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
உளுந்தூர்பேட்டை வட்டம்-606 107,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

******

ஆணை

இவ்வாணையம் 06.10.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.R.பாலமுருகன், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், உளுந்தூர்பேட்டை வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம் மற்றும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.இரா.தவமணி, மண்டல துணை வட்டாட்சியர், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம் ஆகியோர்கள் 10.11.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் தனது எழுத்துமூல விளக்கத்தில், தான் உளுந்தூர்பேட்டை வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்ததில் தலைமையிடத்துத் துணை வட்டாட்சியராக 01.08.2024 அன்று மு.ப. பணியில் சேர்ந்து 05.08.2025 வரையில் பணியாற்றியதாகவும், தனியரின் மனுவானது தான் பணியேற்கும் காலத்திற்கு முன் உள்ளதாகும் என்றும், உளுந்தூர்பேட்டை

வட்டம், மாரனோடை கிராமத்தைச் சேர்ந்த திரு.அ.ஜான் என்பவரின் 12.07.2024 நாளிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு தான் பொறுப்பேற்ற பிறகு 25.10.2024 அன்று தன்னால் தகவல் வழங்கப்பட்டது என்றும், தான் கடந்த ஜூலை 2024 முதல் செப்டம்பர் 2024 வரையில் உளுந்தூர்பேட்டை வட்டத்தில் மக்களுடன் முதல்வர் முகாம் பல்வேறு கட்டங்களில் நடைபெற்று வந்தது என்றும், 143 வருவாய் கிராமங்களை கொண்ட உளுந்தூர்பேட்டை வட்டத்தில் மேற்படி முகாம்களில் அதிகப்படியான மனுக்கள் வரப்பெற்று அது தொடர்பான பணிகள் மேற்கொண்டமையால் அதிக பணிச்சுமையின் காரணமாக உரிய நேரத்தில் தனியரின் மனுவிற்கு தகவல் வழங்கிட இயலவில்லை என்று தெரிவித்து, தனது எழுத்துமூல விளக்கத்தினை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து கீழ்க்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

- **ஆணையத்தால் 06.10.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு, பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கிணங்க, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, சமர்ப்பித்த எழுத்துமூல விளக்கம் ஏற்புடையதல்ல என்பதை ஆணையம் பதிவு செய்து, தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.2,000/-(ரூபாய் ஆயிரம் மட்டும்) அபராதம் அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு விதிக்கப்படுகிறது. அதனை அரசு கணக்குத் தலைப்பில் செலுத்திவிட்டு அது குறித்த அறிக்கையினை 16.12.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது. மேலும் அன்றைய தினம் தற்போதைய பொதுத் தகவல் அலுவலரும் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகுமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

ஒம்/-(அபய் குமார் சிங்)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். CP 4244/F/2024</u>

பெறுநர்
<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர் /
வருவாய் வட்டாட்சியர் அலுவலர்,
வருவாய் வட்டாட்சியர் அலுவலகம்,
உளுந்தூர்பேட்டை வட்டம்-606 107,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் (12.07.2024 தேதிய),
தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்,
உளுந்தூர்பேட்டை வட்டம்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)

<u>புகார்தாரர்</u>

திரு.அ.ஜான்,
மாதா கோயில் தெரு,
மாரனோடை கிராமம்,
திருநாவலூர் அஞ்சல்,
உளுந்தூர்பேட்டை வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-607 204.

<u>நகல்</u>

மாவட்ட ஆட்சித்தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For followup).

Copy to: File NS/PA-